பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

08 10 2026 THURSDAY 12 40 PM

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இணைய குற்றங்களை தடுப்பதற்கான சர்வதேச நெறிமுறைகள் வகுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

3. பிரபல திரைப்பட நடிகர் Nana Patekar மாரடைப்பால் கோவாவில் இன்று காலமானார்.

4. யுக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் 25 பேர் உயிரிழந்தனர்.

5. சீன Smash டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manav Thakkar - Manush Shah இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

தொலைத்தொடர்பு துறையில் இதுவரை இல்லாத அளவிற்கு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இதுதொடர்பான மாநாட்டை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

தொலைத்தொடர்பு கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டதோடு சேவைகளும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரசு சேவைகளை மக்களிடம் கொண்டு செல்வதில் டிஜிட்டல் இந்தியா இயக்கம் முக்கியப் பங்கு வகித்து வருவதாக அவர் கூறினார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, நகர்ப்புறங்களுக்கு இணையான தொலைத்தொடர்பு வசதிகள் ஊரகப் பகுதிகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கல்வி, சுகாதாரம் மற்றும் அரசு சேவைகளை வழங்குவதில் கைபேசி மற்றும் இணையதளம் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் அவர் கூறினார்.

நேரடி பணப்பரிமாற்ற திட்டத்தின் கீழ், 50 லட்சம் கோடி ரூபாய் பயனாளிகளின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இணைய குற்றங்களை களைவதற்கு ஒருங்கிணைந்த சர்வதேச நெறிமுறைகள் வகுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

சரக்கு மற்றும் சேவை வரி குழுமத்தின் கூட்டம், மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் புதுதில்லியில் நடைபெற்று வருகிறது.

இந்தக் கூட்டத்தில் இந்த வரி விதிப்பை மேலும் எளிமையாக்குவதற்கான சீர்திருத்தங்கள் குறித்து விவாதிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

சுற்றுச் சூழலை பாதுகாப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக Fiji சென்றுள்ள அவர், ஆஸ்திரேலிய சுற்றுச் சூழல் அமைச்சருடன் நடத்திய பேச்சுகளுக்குப் பின்னர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

சுற்றுச் சூழல் பாதுகாப்பு குறித்து இந்த பேச்சுக்களின் போது விரிவாக விவாதிக்கப்பட்டதாகவும் அமைச்சர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

நாட்டின் பாதுகாப்பு பணிகளில் மட்டுமின்றி, இயற்கை பேரிடர் காலங்களிலும் இந்திய விமானப் படை ஆற்றி வரும் பணி பாராட்டுதலுக்குரியது என்று குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

விமானப்படை தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப்பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

ஆப்பரேஷன் சிந்தூர் நமது விமானப்படையின் பெருமையை உலகிற்கு உணர்த்தியதாக அவர் கூறியுள்ளார்.

இந்திய விமானப்படை அர்ப்பணிப்புடன் ஆற்றிவரும் பணியை கண்டு நாடு பெருமிதம் கொள்வதாகவும் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் மத்திய அமைச்சர்கள் பலர் இந்நாளையொட்டி வாழ்த்துச் செய்தி விடுத்துள்ளனர்.

>>>>>><<<<<<

மக்கள் நலனே தேசத்தின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு செயல்பட்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, 25 ஆண்டுகள் பொதுசேவையை நிறைவு செய்துள்ள நிலையில், அவரது தொலைநோக்குப் பார்வையின் கீழ், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

நீடித்த வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள், மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை

ஏற்படுத்தியுள்ளன. இதுதொடர்பான சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது கொச்சி நீர் மெட்ரோ சேவை திட்டம்.

( Sound Byte - (Voice) 60 Sec. )

( 2023ஆம் ஆண்டு ஏப்ரல் 25ஆம் தேதி பிரதமர் திரு. நரேந்திர மோடி கொச்சி நீர் மெட்ரோ சேவையை தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து அதற்கு மறுநாள் முதல் பயணியர் சேவை தொடங்கியது.

நகர்ப்புறங்களுக்கான பொது போக்குவரத்து கட்டமைப்பில் புதிய அம்சமாக இந்த சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. கொச்சி நகரின் போக்குவரத்து நெரிசலை பெரிய அளவில் குறைப்பதற்கு இந்த சேவை உதவி வருகிறது. நாட்டின் முதலாவது நீர் மெட்ரோ சேவை அறிமுகப்படுத்தப்பட்ட பெருமையையும் கொச்சி கொண்டுள்ளது. இந்த சேவையை கடந்த வாரம் வரை 77 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயன்படுத்தியுள்ளனர்.

குறிப்பாக சொல்லவேண்டுமென்றால் தேசப்பிதா மகாத்மா காந்தி பிறந்த தினமான கடந்த 2ஆம் தேதி மட்டும் 11 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இதில் பயணித்துள்ளனர். நீர் வழிப் போக்குவரத்தில் நவீன அம்சங்களுடன் இந்த சேவை, கொச்சி மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. )

>>>>>><<<<<<

தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்காக மாநில அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்களும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

(சவுண்ட் பைட - டாக்டர் அருண் 42 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

பிரபல திரைப்பட நடிகர் Nana Patekar இன்று கோவாவில் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 76.

ஹிந்தி, மராத்தி, தமிழ் உள்ளிட்ட பல்வேறு மொழி திரைப்படங்களில் அவர் நடித்துள்ளார்.

தமிழில் பொம்மலாட்டம் மற்றும் காலா திரைப்படத்தில் அவர் ஏற்று நடித்த கதாபாரத்திரங்கள் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றன.

காலா திரைப்படத்தில், சொந்தக் குரலில் தமிழில் அவர் பேசிய வசனங்கள் ரசிகர்களால் பெரிதும் பாராட்டப்பட்டன.

(சவுண்ட் பைட்-காலா திரைப்படக்காட்சி 40 sec.)

அவரது மறைவுக்கு குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் மற்றும் தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

>>>>>><<<<<<

யுக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் 25 பேர் உயிரிழந்தனர், நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

யுக்ரைனின் Kyiv உட்பட பல்வேறு நகரங்களை குறிவைத்து ரஷ்யா இந்த தாக்குதலை நடத்தியுள்ளது.

70க்கும் மேற்பட்ட ஏவுகணைகள் மற்றும் நூற்றுக்கணக்கான ட்ரோன்கள் மூலம் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக யுக்ரைன் அதிபர் திரு. Volodymir Zelenskyy கூறியுள்ளார்.

40க்கு மேற்பட்ட ஏவுகணைகளையும், நூற்றுக்கணக்கான ட்ரோன்களையும் யுக்ரைன் இடைமறித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் இந்த நடவடிக்கை கண்டனத்திற்குரியது என்றும் திரு. Volodymir Zelenskyy கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

சீன Smash டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manav Thakkar - Manush Shah இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 11-9, 11-5, 11-4 என்ற செட்கணக்கில் சீனாவின் Liang - Xiang இணையை வென்றது.

>>>>>><<<<<<

மலேசியாவில் நடைபெற்று வரும் செவித்திறன் குறைபாடு கொண்ட மாற்றுத்திறனாளிகளுக்கான ஆசிய பசிபிக் விளையாட்டு போட்டிகளில் இந்தியா 5 தங்கம், 5 வெள்ளி, 10 வெண்கலப் பதக்கங்களை வென்று, பதக்கப்பட்டியலில் 3வது இடத்தில் உள்ளது.

>>>>>><<<<<<

போர்ச்சுக்கலில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 7-6, 6-1 என்ற செட்கணக்கில் லித்துவேனியாவின் Justina Mikulskyte-யை வென்றார்.

>>>>>><<<<<<

Bendigo சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Surya Charisma Tamiri காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-2, 21-6 என்ற செட்கணக்கில் இங்கிலாந்தின் Karen Yun Quao Feng-ஐ வென்றார்.

>>>>>>END<<<<<<<